# கவி பாரதி வித்யாலயா

*Cir. No*: G/2024-25/105

01.03.2025

அன்புடையீர்,

வணக்கம்.

“அனுபவமே அறிவின் ஒரே ஆதாரம்” என்ற அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டைனின் கூற்றினை மனதில் கொண்டு, எமது பள்ளியில் இயற்பியல் துறையில் 22 ஆண்டுகாலமாக மிகச்சிறந்த முறையில் கல்வி பணியாற்றி வருகின்ற திருமதி. **ச. உமா மகேஸ்வரி** அவர்களைக் கவி பாரதி வித்யாலயாவின் புதிய முதல்வராக அறிமுகம் செய்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

அனுபவம், அர்ப்பணிப்பு, பன்முகத்தன்மை ஆகியவை அவரை ஒரு தலைசிறந்த முதல்வராக எடுத்துக்காட்டும் என்பதில் ஐயமில்லை. மேலும் இவருக்கு உறுதுணையாக, மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் தனித்திறமைகளை வெளிக்கொண்டுவரும் விதமாகத் திருமதி. **வி. காயத்ரி** அவர்கள் பள்ளியின் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவர்கள் இருவரும் படைப்பாற்றல் மற்றும் புதுமைகளைப் புகுத்துவதில் தங்களுக்கெனத் தனி முத்திரை பதித்தவர்கள். இவ்விரு ஆளுமைகளையும் உங்களிடம் அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறோம். உங்களின் அன்பான வாழ்த்துகளையும் முழு ஒத்துழைப்பையும் இவர்களுக்குத் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். தனித்திறமை மிக்க ஆசிரியர்களின் உதவியுடன் தங்கள் குழந்தைகளுக்கு ஒரு முழுமையான கல்வி வழங்குவார்கள் என்று உறுதி கூறுகிறேன்.

2024 ஆம் ஆண்டின் புள்ளிவிவர கணக்கெடுப்பின்படி 1,12,112 மருத்துவ படிப்பிற்கான இடங்களுக்கு 23,33,297 மாணவர்கள் நீட் தேர்வு எழுதினர். அதில் 4.8% மாணவர்கள் மட்டுமே மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தனர். உலக சுகாதார நிறுவனத்தின் அறிக்கையின் படி 1000 மக்களுக்கு ஒரு மருத்துவர் போதுமானது. ஆனால், தற்போதைய விகிதப்படி, 834 மக்களுக்கு ஒரு மருத்துவர் என்ற நிலை இந்தியாவில் உள்ளது. இது அதிகப்படியான மருத்துவர்கள் எண்ணிக்கை. 2025 இன் நிதி மசோதாவில் 10,000 திற்கு அதிகப்படியான மருத்துவ இடங்கள் அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஐந்து வருடங்களில் 75,000 மருத்துவ இடங்கள் உருவாக்கப்படும் என்றும் தெரிவித்தது. சீனா, ரஷ்யா, ஜெர்மனி மற்றும் பிற நாடுகளில் இருந்து பட்டம் பெற்ற மருத்துவர்களின் வருகையும் அதிகமாக இருக்கிறது. இங்கு ஒரு முக்கிய வினா எழுகிறது? இந்த மருத்துவர்களுக்கெல்லாம் இந்தியாவில் இனி எங்கே வேலை கிடைக்கும்?

இதேபோன்று தமிழ்நாட்டில் 17,440 ஐஐடி இடங்களுக்கு 14,76,557 மாணவர்கள் தேர்வு எழுதினர். ஆக 1.20 சதவீத மாணவர்களுக்கே ஐஐடி இல் இடம் கிடைத்தது. கடந்த வருடம் சில அமெரிக்க நிறுவனங்கள் 4 இலட்சம் மட்டுமே ஆண்டு ஊதியமாக ஐஐடி மாணவர்களுக்கு அறிவித்தது. அமெரிக்கா செல்வதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு அதை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டனர். சற்றே சிந்தியுங்கள். நம் மாணவர்கள் உங்களுடனே வாழ்ந்து, இந்தியாவில் ஆண்டுக்கு ₹4,00,000 சம்பாதிக்க முடியாதா?

செயற்கை நுண்ணறிவின் அபரிமிதமான வளர்ச்சியின் படி இன்னும் சில ஆண்டுகளில் நம் குழந்தைகள் வாய் திறந்து பேசவே மாட்டார்கள். அவர்கள் என்ன பேச வேண்டும் என்று மனதில் நினைத்தாலே போதும். செயற்கை நுண்ணறிவு, அதை அவர்களுக்குப் பிடித்த மொழியில் அறிவித்து விடும். எந்த வார்த்தையும் பேசாமலே மனதோடு மனதாக எண்ணங்கள் பரிமாறப்படும். இதனையும் சற்று சிந்தியுங்கள்.

நம் கவி பாரதி பள்ளியில் பயிலும் மாணவர்கள் மன உறுதியுடன் தைரியமாகவும் நல்ல முடிவுகளை எடுக்கும் திறனுடனும், ஆக்கபூர்வமாகச் செயல்படவும், எந்தத் தயக்கமும் இல்லாமல் அனைத்து நிகழ்வுகளிலும் பங்கேற்கவும், அனைத்து செயல்களிலும் தன்னம்பிக்கையுடன் செயல்படவும் எம் பள்ளி கற்றுத் தருகிறது என்று உறுதியாக நம்புகிறேன். இத்திறமைகளைத் தங்கள் குழந்தைகள் வெளிப்படுத்துவதை மற்ற மாணவர்களுடன் ஒப்பிட்டு நீங்களே பார்த்திருப்பீர்கள். அவர்கள் எதிர்காலத்தில், எந்தத் துறையைத் தேர்வு செய்தாலும், அந்தத் துறையில் முதல் 10 இடங்களில் திகழ்ந்து, நிறைமனதோடு மகிழ்ச்சியாக வாழ்வார்கள் என்று உறுதி அளிக்கிறேன்.

நல்லாசிகள்

ஆ.த.பா.போஸ்

(செயலாளர்)

**குறிப்பு:** ஏப்ரல் முதல் புதிய உள்விளையாட்டு அரங்கு மாணவர்களின் பயன்பாட்டுக்கு வந்துவிடும். கபடி மற்றும் மேசை பந்தாட்டமும் நடத்தப்படும்.

# KAVI BHARATHI VIDYALAYA

*Cir. No*: G/2024-25/105

01.03.2025

Warm Greetings to All!

Albert Einstein once stated, "The only source of knowledge is experience." Experiencing the profundity of his saying, it is with great pleasure that we introduce our teacher Mrs. **S. Uma Mageswari**, a veteran educator with 22 years of expertise in Physics, as the newly appointed Principal of Kavi Bharathi Vidyalaya. Her vast experience, dedication and distinct versatility make her an invaluable asset to our institution as she dons the mantle of leadership. To stand alongside her in nurturing the innate talents of students from Kindergarten to Class V, we are delighted to announce the promotion of Mrs. **V. Gayathri** as Headmistress who is known for her decades of experience with challenging and cascading creativity and novelty. We share this momentous update with immense happiness.

We kindly ask you to extend your warm wishes and full support to Mrs. Uma Mageswari and Mrs. Gayathri to helm KBV decisively. We assure you that along with our dedicated staff, they will provide your children with holistic education.

According to 2024 statistical data, 23,33,297 students wrote NEET exams for 1,12,112 medical seats. It means, only 4.8% of students got medical seats. As per World Health Organization, there should be one doctor for every 1,000 people. In India, the current ratio is one doctor for every 834 people, we have more doctors than required. As per 2025 budget, 10,000 additional medical seats will be introduced this year, with a plan to add another 75,000 seats over the next five years. Additionally, many doctors are earning their degrees from countries like China, Russia, Philippines, Ukraine, Germany and others. With this increasing number of medical graduates, a crucial question arises—where will all these doctors find employment?

Similarly, 14,76,557 students appeared for JEE exams for 17,740 IIT seats across 23 IITs. It means only 1.20% students got admission in IITs. Last year, the maximum salary package offered to students of IITs by few US companies was only ₹4,00,000 per year. Our students accepted these offers with the sole aim of moving to the United States. Parents, please think—can't your children be with you and earn ₹4,00,000 per year, right here in India?

With the rapid advancement of AI technology, in a few years, our children may no longer need to speak aloud. They will simply think of what they want to say, and AI will convey their message in any language of their choice. In response, the other person will communicate back mind to mind without uttering a word.

At KBV, we are committed to nourishing our students to grow strong, confident and enthusiastic in participation and decision making without any hesitation. Your children have already begun developing these qualities and you are enjoying it. We assure you that our students will excel in their chosen fields, ranking among the top 10, and lead happy, fulfilling lives.

With best wishes,

A.T.B. BOSE
*(Secretary)*

**Note:** From April, the new indoor auditorium will become functional. Kabaddi and Table Tennis will be developed.